திடலில் நடைபெறும் அந்நிகழ்ச்சியில் ஆளுநர் அவர்களும், அமைச்சர்களும் கலந்துகொள்வார்கள். உறுப்பினர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள் வார்கள். உறுப்பினர்களும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக பேரவை இப்போது ஒத்திவைக்கப்பட்டு 11-30 மணிக்கு மறுபடியும் கூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பின்னர் பேரவை ஒத்திவைக்கப்பட்டது.

இடைவேளைக்குப் பின் காலை, 11-30 மணிக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர், புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் மீண்டும் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு திரு. ஜேம்ஸ், திரு. எட்மண்ட் ஆகியோர் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வருவார்கள்.

(4) கவன ஈர்ப்பு.

கன்னியாகுமரி, திருநெல்வேலி, திருச்சி மாவட்டங்களில் வயிற்றுக்கடுப்பும், காலராவும் ஏற்பட்டுள்ளதும் அதைத் தடுப்பதன் அவசியம் குறித்தும்.

THIRU P. SOUNDARAPANDIAN : Sir, I call the attention of the Hon. the Minister for Health to a matter of urgent public importance, namely the outbreak of cholera and serious type of Dysentry in the districts of Kanyakumari, Tirunelveli and Tiruchirappalli, during the last few months and the necessity to take immediate steps to prevent the same.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முனிச்சிறை மற்றும் மேல்புரம் ஆகிய இரண்டு ஊர்களிலும் வயிற்றுக்கடுப்பு மற்றும் குடற்காய்ச்சல் ஆகிய இரண்டு நோய்கள் 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டன. அதற்குப் பிறகு திருவெட்டாறு, தக்கலை மற்றும் குருந்தங்கோடு வட்டாரங்களில் (Blocks) வயிற்றுக் கடுப்பு நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. மொத்தத்தில் 33 ஊர்கள் பாதிக்கப்பட்டன. தோவாளைத் தாலுக்கா முக்கியமாக பாதிக்கப்பட்டது.

1974 சனவரி 30] [திரு. க. அன்பழகன்]

நோய் கண்டவர்களின் மலத்தை ஆய்வு செய்தபொழுது அதில் காலரா நோய் அணுக்கள் இல்லையென அறிவிக்கப்பட்டது.

நாகர்கோவிலுள்ள அரசு தலைமையிட மருத்துவமனையில் 1973 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும், 1974 ஆம் ஆண்டு சனவரி மாதத்திலும் மொத்தம் 482 பேர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது; அவர்களில் ஒன்பது பேர் இறந்தனர்.

பாதிக்கப்பட்டவர்களின் வீடுகள், படுக்கைகள், உடைகள், மலம் முதலியவைகளில் நச்சுத் தடை மருந்துகள் தெளித்தல், குடிநீர் நிலையங்களில் குளோரின் மருந்து கலத்தல் முதலிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1973-ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களிலும் 1974-ஆம் ஆண்டு சனவரி மாதத்திலும் மொத்தம் 2,05,000 பேர்களுக்கு காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டது.

அண்மையில் யாரும் பாதிக்கப்படவில்லை. குமரி மாவட்டத்தில் நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது.

திருநெல்வேலி மாவட்டம்:

திருநெல்வேலி மாவட்டத்தில் வடகிழக்குப் பகுதிகளிலுள்ள ஸ்ரீவைகுண்டம் மற்றும் தூத்துக்குடிப் பகுதிகளில் 7—10—1973-ஆம் நாளிலிருந்து தொடங்கும் கால அளவில் குடற்காய்ச்சல் நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. தென்காசிப் பகுதியிலும் இங்கொன்றும் அங்கொன்றுமாக நோய் ஏற்பட்டதென்று அறிவிக்கப்பட்டது. மொத்தம் 298 பேர் பாதிக்கப்பட்டனர். அவர்களில் 55 பேர் இறந்தனர். பாதிக்கப்பட்டவர்களில் 12 பேர் காலரா நோய் அணுக்களால் பாதிக்கப்பட்டவர்களென்றும், இறந்தவர்களில் இருவர் நோய் அணுக்களால் இறந்தனரென்றும் ஆய்வுகளிலிருந்து அறியப்பட்டது.

குடிநீரில் குளோரின் மருந்து கலத்தல், பாதிக்கப்பட்ட இடங்களில் நச்சுத் தடை மருந்து தெளித்தல், பெருவாரியாக காலராத் தடுப்பு ஊசி குத்துதல் முதலிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்டப் பகுதிகளில் மாவட்டப் பணியாளர்களால் 3,99,833 பேர்களுக்கு காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டது. இதைத் தவிர, தூத்துக்குடி நகரத்தில் 39,000 பேர்களுக்கும் காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டது.

நிலைமை கட்டுக்குள் அடங்கியுள்ளது. இப்போது அஞ்சுவதற்குக் காரணம் எதுவுமில்லை.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்:

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள பெரம்பலூர், வேப்பந்தட்டை மற்றும் திருமானூர் வட்டாரங்களில் (Blocks) 20—1—1974-ஆம் நாள் வரை 78 பேர்களுக்குக் காலரா மற்றும் குடற்காய்ச்சல் நோய் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அவர்களில் 10 பேர் இறந்தனர். திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசு தலைமையிட மருத்துவமனையில் 24—1—1974-ஆம் நாள் வரை குடற்காய்ச்சல் நோயால் வாடிய 209 பேர் சேர்க்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப் பட்டனர்.

மொத்தம் 22 பேர்களின் மலம் ஆய்வுக்கு அனுப்பப்பட்டது. அதில் 5 பேர்களின் மலத்தில் காலரா நோயணுக்கள் இருந்தனவென்றும் மூவரின் மலத்தில் காலரா நோயணுக்கள் இல்லையென்றும் அறிவிக்கப்பட்டது. மீதமுள்ளவர்களின் மல ஆய்வின் முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

மாவட்டத்தில் இதுவரை 24,444 பேர்களுக்குக் காலராத் தடுப்பு ஊசி குத்தப்பட்டுள்ளது.

நிலைமை கட்டுக்குள் அடங்கியிருக்குமாறு தொடர்ந்து முயற்சி எடுக்கப் பட்டு வருகிறது.

(5) அறிக்கை அளித்தல்.

வனத்துறை, தமிழ்நாடு மின்வாரியம் ஆகியவை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகள் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை குறித்து அறிக்கை.

THIRU V. KRISHNAMOORTHI: Mr. Speaker, Sir, I rise to present the Reports of the Committee on Estimates on the action taken by the Government on the recommendations of the Committee contained in the Reports on (i) Forests and (ii) Tamil Nadu State Electricity Board.